அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 84/2017

தேதி : 06/09/2017

**மருத்துவர்களுக்கான பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்ற உத்தரவை மகிழ்வோடு வரவேற்கிறேன்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை**

தமிழகத்தில் அரசு மருத்துவ மனைகளில் நிரப்பப்படாமல் உள்ள 2500 மருத்துவர்களுக்கான பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பிறப்பித்திருக்கும் உத்தரவை மகிழ்வோடு வரவேற்கிறேன்.

தமிழகத்தில் தற்சமயம் நிலவிவரும் டெங்கு காய்ச்சலின் அபாயத்திலிருந்து குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் காப்பாற்றியாக வேண்டும் என்ற அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு நீதிமன்ற தீர்ப்பை ஏற்று மருத்துவர்களுக்கான பணியிடங்களை நிரப்புவதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். ஏழை எளிய நடுத்தர மக்கள் அரசு மருத்துவமனைகளையே சார்ந்திருக்கும் நிலையில், மருத்துவர்களின் எண்ணிக்கையில் குறைபாடுகள் இருந்தால் அது நோயுற்றுவரும் மக்களுக்கு துன்பங்களை மேலும் அதிகரிப்பதாக அமைந்துவிடும். எனவே தமிழக அரசு இவ்விஷயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மேலும், வேலூர் சி.எம்.சி.மருத்துவ கல்லூரி இந்த ஆண்டுக்கான மருத்துவ சேர்க்கையை நீட் தேர்வின் அடிப்படையில் செய்ய விருப்பமில்லாமல் நிறுத்திவைத்துள்ளதாக வெளியிட்டுள்ள அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கிறது. தமிழக மக்களின், மாணவர்களின், பெற்றோர்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு, நீட் தேர்வால் தமிழக மாணவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு விடைகாணும் விதமாக வேலூர் சி.எம்.சி.மருத்துவ கல்லூரி எடுத்திருக்கும் முடிவை தமிழக மக்களின் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் மகிழ்ந்து பாராட்டி வரவேற்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com